செய்தி வெளியீடு எண்: 139 நாள்: 04.03.2013

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.3.2013) தலைமைச் செயலகத்தில், மத்திய பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற 56வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டி 2012ல் பதக்கங்களை வென்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கினார்கள்.

தமிழக காவல்துறையினரின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில் அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. 2012ஆம் ஆண்டிற்கான 56வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டி மத்திய பிரதேச மாநிலம் போபாலில் 8.2.2013 முதல் 15.2.2013 வரை நடைபெற்றது. இதில் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய சிறப்பு காவல் படைகளைச் சேர்ந்த 937 பேர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு காவல்துறை சார்பாக 41 அதிகாரிகள் மற்றும் காவலர்கள் காவல் கண்காணிப்பாளர் திருமதி. எஸ். ராஜேஸ்வரி, இ.கா.ப. அவர்கள் தலைமையில் பணித்திறன் போட்டிக்கு அனுப்பப்பட்டனர்.

56வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளில் அறிவியல் சார்ந்த புலனாய்வு, நாசவேலை தடுப்பு, கணிப்பொறி திறனாய்வு, நிழற்படம் எடுத்தல், வீடியோ படம் எடுத்தல், காவல் நாய் திறன் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

தமிழ்நாடு காவல்துறை அணி மொத்தமுள்ள 54 பதக்கங்ளில், 5 தங்கம், 6 வெள்ளி மற்றும் 3 வெண்கலம் என மொத்தம் 14 பதக்கங்களையும், 15 சுழற் கோப்பைகளில் 5 சுழற் கோப்பைகளையும் கைப்பற்றி பதக்கப் பட்டியலில் முதலாவது இடத்தை பெற்றுள்ளது.

அறிவியல் சார்ந்த புலனாய்வில் முதலாவது மற்றும் இரண்டாவது சுழற்கோப்பைகளையும், படம் எடுத்தல் மற்றும் கணினி போட்டிகளில் இரண்டாம் இடத்திற்கான சுழற்கோப்பையையும் தமிழக அணியினர் வென்றுள்ளனர். அதிகபட்ச பதக்கங்களை வென்றதன் மூலம் சிறந்த மாநில காவல் அணிக்கான சிறப்பு கோப்பையையும் தமிழக காவல்துறை வென்றுள்ளது.

இத்தகைய போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வெல்லும் காவல்துறையினருக்கு 50 ஆயிரம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை 2004–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசால் உத்தரவிடப்பட்டு அதன் அடிப்படையில் இதுவரை வழங்கப்பட்டு வந்தன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி தற்போது தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 5 லட்சம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 3 லட்சம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 2 லட்சம் ரூபாய், சுழற்கோப்பை வெல்லும்

அணியில் பங்குபெறுபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் என பரிசுத்தொகை பன்மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் மத்திய பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற 56வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டி 2012ல் 5 தங்கப் பதக்கங்களை வென்றவர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் வீதம் 25 லட்சம் ரூபாய், 6 வெள்ளிப் பதக்கங்களை வென்றவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் வீதம் 18 லட்சம் ரூபாய், 3 வெண்கலப் பதக்கங்களை வென்றவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் வீதம் 6 லட்சம் ரூபாய், சுழற்கோப்பை வென்ற அணிகளில் பங்கேற்ற 25 பேர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், என மொத்தம் 61 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகையினை, பதக்கங்களை வென்ற காவல்துறையினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கி, மேலும் பல சாதனைகளை புரியவேண்டுமென்று அவர்களை வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வின்போது, உள்துறை முதன்மைச் செயலாளர் / வளர்ச்சி ஆணையர், காவல்துறை தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), காவல்துறை தலைமை இயக்குநர் (குற்றம்), காவல்துறை தலைவர் (சி.பி.சி.ஐ.டி.) மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 4.3.2013